உ

சிவமயம்

ஸ்ரீ

# முன்னநாத சுவாமி
# வடிவழகி அம்பாள்

# திருவூஞ்சல்

பிரட்டன் பிரஸ்.

திருச்சிற்றம்பலம்.

# முன்னநாதேஸ்வரர் திருவூஞ்சல்

[யாழ்ப்பாணத்து நவாலியூர்-
திரு. க. சோமசுந்தரப்புலவர் பாடியது.]

## காப்பு

முந்துமொரு மூவருக்கு மூல மாகி
முழுதுலகு மீன்றவடி வழகி யோடு
சந்தமலர்த் தடம்பொலிமுன் னேச்சு ரத்திற்
றூகை முளைத்தசிவக் கொழுந்தைப் போற்றிச்
செந்தமிழின் னிசையூஞ்சற் றிருப்பாட் டோதச்
சிந்திப்போர் தீவினைகள் தீர்த்துக் காக்கு
மைந்துகரத் திந்துமுடித் தொந்தித் தந்தி
யானைமுகன் ஞானமலர் காப்ப தாமே.

## நூல்

திருவோங்கு மிருமாயை தூணு நாட்டி
சிவமோங்கு தத்துவங்கள் விட்டம் பூட்டி
அருவோங்கு கலையாதி வடங்கள் மாட்டி
அணியோங்கு மறுநான்கும் பீடங் கூட்டி
உருவோங்க வுஞற்றுமுலை கூஞ்சன் மீதே
ஒளியோங்கு மம்மைவடி வழகி யோடு
முருகோங்கு பொழின்முன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல்— க.

வெளிமருவு மிருசுடருங் குடைகள் தாங்க
விரைமருவு மிவிலணி கவரி வாங்க
நளிமருவு புனலரசன் பனிநீர் தூவ
நயமருவு மடலியம னுடைவாள் காவ

களிமருவு தவமுனிவ ராசி நீடக்
கயன்மருவு நயனிவடி வழகி யோடு
மொழிமருவு புகழ்முன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாட ரூஞ்சல்— உ.

சந்தணியு மாடகயாழ் முனிவன் மீட்ட
தகையணியு மணிமுழவம் நெடுமால் கூட்ட
வந்தணியுங் கந்தருவர் வரிப்பண் பாட
மறையணியு மலரினயன் தாளம் போட
கொந்தணிகுந் தளமடவார் நடன மாட
கோலணியுங் குவளைவிழி யழகி கூட
முந்தணியும் பொழின்முன்னேச் சுரத்துவாழும்
முன்னநா தேஸ்வரரே யாட ரூஞ்சல் ந.

வானகதுந் துபிமுழங்கச் சங்க மேங்க
மண்ணகதூ ரியமிசைக்க மறைக ளோங்க
தேனகமந் தாரமலர் மாரி வீச
சீரகச்செந் தமிழ்மறைமந் திரங்கள் பேச
ஊனகநெக் குருகியடி யவர்க ளாட
உள்ளகஞ்சே ரோங்கார வடிவி யோடு
மோனகலே யருளுமுன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாட ரூஞ்சல்— ச.

வானமருங் கங்கைவர நதிநீர் பன்னீர்
வரமமரு மந்திரநீ ரிளநீர் கூட்டி
ஆனமரு மைந்துமுய ரன்பா லாட்டி
அணியமருந் துகிலுடுத்துக் கலன்கள் மாட்டி
மானமரு நானமலி தேய்வை சாத்தி
மலரமருஞ் செங்கைவடி வழகி யோடு
மோனமுனி வரர்தொழுமுன் னேச்சு ரத்து
முன்னநா தேஸ்வரரே யாட ரூஞ்சல்— ரு.